# வரலாறு, தொல்லியல் ஆய்வுகளில் இனவரைவியல், இனத்தொல்லியலின் பங்கு

வீ.செல்வகுமார்*

*கட்டுரைச்சுருக்கம்:* *தொல்லியல் பழங்கால மக்களின் வரலாற்றையும், வாழ்வியலையும் பொருள் பண்பாட்டின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து ஆராய்கிறது. ஆனால், பொருள் பண்பாட்டை தனித்து ஆராய்வதன் வழியாக மட்டுமே பழங்கால வரலாற்றையும், வாழ்வியலையும் முழுவதுமாக மீளுருவாக்க முடியாது. வேறு பல சான்றுகளும், அணுகுமுறைகளும், புரிதல்களும் அவசியம். எனவே, மானுடவியல், இனவரைவியல், சமகாலப் பண்பாட்டு, கல்வெட்டியல், நாட்டுப்புறவியல், இலக்கியம், வரலாறு போன்ற புலங்களின் சான்றுகள் வழியாகவும், செய்முறைத் தொல்லியல், நிலத்தியல் அணுமுறைகளின் வாயிலாக மட்டுமே பழங்காலப் பண்பாடுகளை,வரலாறுகள, போக்குகளைப் புரிந்துகொள்ள இயலும் என்பதை இக்கட்டுரை சில எடுத்துக்காட்டுகள் வழியாக விளக்கமுயல்கிறது.*

## தொடக்கவுரை

*பொதுவாக வரலாறு, பழங்கால மக்களின் வாழ்க்கை முறைகளைப் பல வகையான சான்றுகளை உற்று நோக்கியதன் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து விளக்குகிறது. ஆனால், பல நிலைகளில் அது சார்புத் தன்மையுடன் எழுதப்படுகிறது. தொல்லியல், பழங்கால மக்களின் வாழ்க்கை முறைகளை, பொதுவாக, அவர்கள் விட்டுச்சென்ற தொல்பொருள்களின் அடைப்படையில் மீளுருவாக்கம் செய்கிறது. இதிலும் சார்புத்தன்மை உள்ளது. குறுகிய பொருளில் புரிந்துகொள்ளப்படும் தொல்லியல் பாடப்பிரிவு, பொருள் பண்பாடுகளை மட்டுமே ஆராயவிழைகிறது. சில சூழல்களில் வரலாறு, தொல்லியல் ஆகிய பாடங்கள், இலக்கியம், மானுடவியல், நாட்டுப்புறவியல், தமிழியல் போன்ற பாடங்களைப் பெரிதும் கருத்தில் எடுத்துக்கொள்வதில்லை. நவீன காலப்*

* *கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்* 613010*:* selvakumarodi@gmail.com

பாடத்திட்டங்களின் கட்டமைப்பு, பல புலங்களைத் தனித்த, முழுமுதல் புலங்களாக உருவாக்கிவிட்டது. இதன் காரணமாக அவை மானிடவியலையும், மனிதப் பண்பாட்டையும் முழுமையாகப் புரிந்துகொள்வதில்லை. எனவே, தற்காலத்தில் துறையிடை ஆய்வுகள் வலுப்பெற்றுவருகின்றன.

சில குறுகிய வரையரையில், வரலாறு எழுதப்பட்ட சான்றுகளை மட்டுமே ஆய்வதாகக் கருதப்படுகிறது. வரலாற்றைப் பரந்துபட்ட பொருளில் அணுகவேண்டும். இவ்வாறாகச் சான்றுகளின் அடிப்படையில் உருவாகிய புலங்களான தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல் போன்றவை சான்றுகளின் ஆய்விலேயே ஒடுங்கிவிட்டன. அவை, முழுமையான பார்வையில் மனிதர்களையும், பண்பாட்டையும் வரலாற்றையும் ஆய்வதில்லை. இத்தகைய சூழலில் ஆய்வாளர்கள் தொல்லியல் பொருள்-பண்பாட்டு ஆய்வின் சிக்கலை உணர்ந்து மானிடவியல், இனவரைவியல் உள்ளிட்ட புலங்களைத் தொல்லியல் விளக்கத்திற்காக நோக்க முற்பட்டனர். தொல்லியலில் 1960களில் லூயி பின்போர்ட் உள்ளிட்டவர்களின் முயற்சியில் உருவான புதிய தொல்லியல் மானிடவியல் அணுகுமுறைக்குச் சிறப்பிடம் அளிக்கிறது (Binford 1983).

மேலும் கல்விநிலை சார்ந்த வரலாற்று வரைவு, பொதுமக்களுக்குப் புரியும் நல்ல தெளிவான எழுத்து நடைமுறையைக் கையாளுவதில்லை. மேலும், சமூக ஊடகங்களில் வரலாற்றுத் திரிபுகளும் அதிகரித்துவிட்டன. இதன் காரணமாக தெளிவான எழுத்து நடைமுறை உள்ள வெளியீடுகள் வரலாறு, பண்பாட்டுத் துறைகளில் அவசியமாகின்றன.

மானிடவியல் மனிதர்களையும், பழங்காலப் பண்பாடுகளையும், சமகாலப் பண்பாடுகளையும் ஆராய்கின்றது (பக்தவச்சலபாரதி 2011 மகேசுவரன் 2023). பிரித்தானிய மரபில், தொல்லியலும், மானிடவியலும் வெவ்வேறு புலங்களாக உள்ளன. அமெரிக்க மரபில் தொல்லியல் மானிடவியலின் பகுதியாகவே பார்க்கப்படுகிறது. பழங்காலப்பண்பாடுகளைமுழுமையாகஅறிய, தொல்பொருள்களை ஆய்ந்தால் மட்டும் போதாது, வரலாற்றுச் சான்றுகள், இனவரைவியல்

*சான்றுகளை ஆராய்ந்து பண்பாட்டின் மையப் பொருண்மையைப் புரிந்துகொண்டால்தான் பண்பாட்டைப் பற்றிய முழுமையான புரிதல் ஏற்பட இயலும் என்பதை 20ஆம் நூற்றாண்டில் தொல்லியல் ஆய்வாளர்கள் உணர்ந்தனர். இருப்பினும் பல நிலைகளில், இன்றும் தொல்லியல் ஆய்வுகள் தனித்த நிலையிலேயே நடைபெறுகின்றன.*

**தொல்லியல் மானிடவரலாறு**

*சான்றுகளின் அடிப்படையில் உருவக்கப்பட்ட இயல்களில் பல சிக்கல்கள் உள்ளன. எனவே மனித வரலாற்றை முழுமையாக ஆராய நாம் தொல்லியல், மானிடவியல், நாட்டுப்புறவியல், வரலாறு ஆகியவற்றின் அணுகுமுறைகளைப் புரிந்துகொள்ளவேண்டும். "தொல்லியல் மானிடவியல் வரலாறு"* Archaeoanthropohistory *என்ற அணுகுமுறை பழங்காலத்தை ஆராயப்பயன்படும் ஓர் அணுகுமுறை ஆகும். இதில் தொல்லியல், மானிடவியல், வரலாறு என அனைத்துப் புலங்களின் அணுகுமுறைகளும் பின்பற்றப்படுகின்றன. புலங்களைக் கடந்த துறையிடை ஆய்வுகள் இக்கால கட்டத்தில் மிகவும் அவசியமாகும். தமிழியல், இந்தியவியல் போன்றவை இக் குறையை ஓரளவு போக்கினாலும், இப்புலங்களும் பல அறிவுசார் சிக்கல்களில் உள்ளன.*

**இனவரைவியல்**

*இனவரைவியல் சமகால மக்களின் வாழ்க்கை முறைகளை விவரிக்கும் ஒரு மானிடவியல் புலமாகும் (*Evans-Pritchard, *1940;* Binford *1978, 1983;* Auyero *2006*, Gobo *2008;* Hamilakis, Yannis and Aris Anagnostopoulos *2009;* Hodder *1986, 2009;* Sangasubana *2009;* Adams *2012;* Eriksson and Kovalainen *2015;* Baral et al. *2016;* O'Reilly *2019;* Rhodes and Corbett *2020;* Mathur, Nita *2022;* Whitehead *2025). இப்பாடப்பிரிவு காலனியாதிக்கக் காலத்தில் உருவாகத்தொடங்கியது. மானிடவியலும் காலனியாதிக்கக் காலத்தில் உருவான புலமாகும், இன்று இப்புலங்கள் காலனியாதிக்க மோகத்தையும், தாக்கத்தையும் தவிர்க்க முயற்சித்துவருகின்றன.*

*இனவரைவியல், பண்பாடுகளைப் புரிந்துகொள்ள மிகவும்*

உதவியாக அமையும் புலமாகும். சமகால மக்களின் வாழ்க்கை முறைகளை ஆராயும் போதுதான் அவை பண்பாடுகளின் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ள உதவுகின்றன. பொதுவாகத் தொல்லியல் ஆய்வாளர்கள் பொருள்களை வைத்துக்கொண்டும், அவற்றின் கூறுகளைக்கொண்டும் புற உதவியின்றி வரலாற்றைக் கட்டமைக்க முயற்சி செய்கிறார்கள். அவர்கள் பொருள்களை வகைப்படுத்தி, வரிசைப்படுத்தி, பகுப்பாய்வு செய்யும்போது, அப்பொருள்கள் பயன்படுத்தப்பட்ட சூழலைப் புரிந்துகொள்ள சரியான சான்றுகள் இல்லாமையால், பல ஆய்வுகளும் குறையுள்ள விவரிப்பு முறை ஆய்வாகவே விளங்குகின்றன. அவை விளக்கமுறை ஆய்வாக மாறுவது இல்லை. முழுமையான விவரிப்பு முறையில் தவறொன்றும் இல்லை. அதுவும் தேவையானதே. இருப்பினும் விளக்கமுறை ஆய்வுகள் மிகவும் அவசியமானவையாகும். இனவரைவியல் என்ற புலம் பழங்காலத்திலிருந்தே செயல்பட்டுவருகிறது. தமிழ் இலக்கியங்களில் பல இனவரைவியல் தொடர்பான சான்றுகள் உள்ளன. நவீன காலத்தில் இனவரைவியல் என்பது "பழங்குடிகளின்" ஆய்வு மட்டுமே எனக் காலனியாதிக்கப் பார்வையில் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது. எந்த ஒரு சமகாலக் குழுவையும் இனவரைவியல் அணுகுமுறையில் ஆய்வு செய்யலாம். ஓர் இடத்தில் தொல்லியல் ஆய்வு செய்யும் அறிஞர், பணியாளார், ஆர்வலர் குழுவின் தொல்லியல் ஆய்வுசாரா, சமகால நடத்தைகளையும், செயல்பாடுகளையும் இனவரைவியல் அணுகுமுறையில் ஆய்வுசெய்யலாம். தொல்லியல் ஆய்வாளர்களுக்கு இனவரைவியல் ஒரு பட்டறிவு சார் முறையாக (heuristic method) விளங்குகிறது. பொதுவாக தொல்லியல் ஆய்வுகள் சில நேரங்களில் விரிவான இனவரைவியலைச் சார்ந்தும், பல நேரங்களில் இனவரைவியலில் கிடைத்த ஒரு சில பண்பாட்டுக்கூறுகளைத் தங்களது தொல்பொருள் விளக்கத்திற்கும், புரிதலுக்கும் பயன்படுத்துகின்றன.

## இலக்கிய இனவரைவியல்

இலக்கிய, வரலாற்று, புனைவு இனவரைவியல் அணுகுமுறைகள் செவ்வியல் இனவரைவியலில் (Classical ethnography) அடங்கா. இருப்பினும் அவற்றிலும் இனவரைவியல் கூறுகள் உள்ளன.

இலக்கியங்களில் காணப்படும் விவரங்களும் இனவரைவியலில் அடங்கும். இருப்பினும் இவற்றில் புனைவுகளும் உள்ளடங்கும். சில சூழல்களில் இவை துல்லியமாகவும், பல சூழல்களில் இவை மிகைப்படுத்தப்பட்டும் இருக்கலாம். இவற்றைப் புனைவு இனவரைவியல் என அழைக்கலாம். இராமாயண, மகாபாரதக் கதைகளிலும் இத்தகைய இனவரைவியல் கூறுகள் காணப்படுகின்றன.

**சங்க இலக்கியம்**

சங்க இலக்கியத்தில் உள்ள பல பண்பாடுகளின் விவரக் கூறுகளும் இலக்கிய இனவரைவியலில் அடங்கும். பட்டினப்பாலையில் மீனவர் குடியிருப்பும் காவிரிப்பூம்பட்டினத்தின் நகர அமைப்பும் மிக அழகாக விளக்கப்படுகின்றன.

*"பறழ்ப் பன்றி, பல் கோழி,*
*உறைக் கிணற்றுப் புறச்சேரி,*
*மேழகத் தகரொடு சிவல் விளையாட*
*கிடுகு நிரைத்து, எஃகு ஊன்றி,*
*நடுகல்லின் அரண் போல,*
*நெடும் தூண்டிலில் காழ்*
*சேர்த்திய குறுங்கூரைக் குடி நாப்பண்,*
*நிலவு அடைந்த இருள் போல,*
*வலை உணங்கும் மணல் முன்றில் (பட்டினப்பாலை 75-83)*

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரத்திலும் இனவரைவியல் நாட்டுப்புறவியல் என்று கருதக்கூடிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவற்றில் சிலவற்றை புனைவு வகை எனக் கருதலாம். இருப்பினும் அவை நாட்டுப்புற வழக்காற்றைப் பிரதிபலிப்பவை எனலாம்.

*"வழங்குவில் தடக்கை மறக்குடித் தாயத்துப்*
*பழங்கட னுற்ற முழங்குவாய்ச் சாலினி*
*தெய்வ முற்று மெய்ம்மயிர் நிறுத்துக்*

*கையெடுத் தோச்சிக் கானவர் வியப்ப*
*இடுமுள் வேலி எயினர்கூட் டுண்ணும்*
*நடுவூர் மன்றத் தடிபெயர்த் தாடிக்*
*கல்லென் பேரூர்க் கணநிரை சிறந்தன*
*வல்வில் எயினர் மன்றுபாழ் பட்டன*
*மறக்குடித் தாயத்து வழிவளஞ் சுரவாது*
*அறக்குடி போலவிந் தடங்கினர் எயினரும்*
*கலையமர் செல்வி கடனுணின் அல்லது*
*சிலையமர் வென்றி கொடுப்போ ளல்லள்*
*மட்டுண் வாழ்க்கை வேண்டுதி ராயின்*
*கட்டுண் மாக்கள் கடந்தரும் எனவாங்கு (சிலப்பதிகாரம், வேட்டுவ வரி: 6-14)*

**பெரியபுராணம்**

சேக்கிழார் பெரியபுராணத்தில் வரக்கூடிய நந்தனார் கதையையும் (திருநாளைப்போவார்) ஓர் இலக்கிய இனவரைவியல் வகை என்று கூறலாம். இதில் நந்தனாரின் புலைக்குடியிருப்பு விவரிக்கப்படுகிறது.

திருநாளைப் போவார் நாயனார் (நந்தனார்) புராணம்
*"பகர்ந்துலகு சீர் போற்றும்*
*பழைய வளம் பதியாகும்*
*திகழ்ந்த புனற் கொள்ளிடம் பொன்*
*செழுமணிகள் திரைக் கரத்தால்*
*முகந்து தர இரு மருங்கும்*
*முளரி மலர்க் கையேற்கும்*
*அகல் பணை நீர் நன்னாட்டு*
*மேற்காநாட்டு ஆதனூர். 1 ...*
*வயல் வளமும் செயல் படு*
*பைந் துடவையிடை வருவளமும்*
*வியலிடம் எங்கணும் நிறைய*
*மிக்க பெரும் திருவினவாம்*
*புயலடையும் மாடங்கள் பொலிவு*
*எய்த மலியுடைத்தாய்*
*அயலிடை வேறு அடி நெருங்கக்*

*குடி நெருங்கி உளது அவ்வூர். 5*
*மற்றவ்வூர் புறம் பணையின் வயல்*
*மருங்கு பெரும் குலையில்*
*சுற்றம் விரும்பிய கிழமைத் தொழில்*
*உழவர் கிளை துவன்றிப்*
*பற்றிய பைங் கொடிச் சுரை மேல்*
*படர்ந்த பழம் கூரையுடைப்*
*புற்குரம்பைச் சிற்றில் பல*
*நிறைந்து உளதோர் புலைப்பாடி. 6...பெரியபுராணம்*

## வரலாற்று இனவரைவியல்

வரலாற்றுக்கால இலக்கியங்களும் இனவரைவியல் வகையில் அடங்கும். பெரிப்ளஸ், அல்பெருனி, இபின் பத்தூதா, மார்க்கோபோலோ போன்றவர்களின் குறிப்புகளை வரலாற்று இனவரைவியலில் அடக்கலாம். இவற்றில் சில விளக்கங்களை வரலாற்று ஆசிரியர்கள் மிகைப்படுத்தல், கற்பனை, தவறு என்றும் பதிவு செய்துள்ளனர் இருப்பினும் இவற்றில் பல உண்மைகள் உள்ளன. இவற்றில் சில தகவல்கள் கூறியவர்களின் தவறு, பதிவுசெய்தவர் புரிந்துகொண்டதில் உள்ள தவறு ஆகியவை பிழையான தகவல்கள் பதிவுசெய்யப்படக் காரணமாக இருந்திருக்கலாம். மேலும், சமகால அரசியலுக்கும், சூழலுக்கும் பொருந்தாத கருத்துக்கள் தவறான பதிவுகள் எனவும் வாதிடப்படுகின்றன.

## இனத்தொல்லியல் (Ethnoarchaeology)

பண்பாடுகளைப் புரிந்துகொள்ள பொருள் பண்பாட்டுச் சூழலை அறிய தொல்லியல் ஆய்வாளர்கள் இனத்தொல்லியல் என்ற புலத்தை உருவாக்கியுள்ளனர். தொல்லியல் சான்றுகளைப் புரிந்துகொள்ள செய்யப்படும் ஆய்வே இனத் தொல்லியல் ஆகும். லூயி பின்போர்ட் நுனாமுயிட் எஸ்கிமோக்களை இம்முறையில் ஆய்வு செய்துள்ளார் (Binford 1978, 1983). இயான் ஹாடர் ஆப்பிரிக்கப் பழங்குடிகளை ஆய்வுசெய்துள்ளனர் (Hodder, 1986 2009).

**தொல்லியலுக்கு இனவரைவியலின் பங்கு: சில வகை ஆய்வுகள்**
**I. தென்னிந்தியப் புதியகற்காலச் சாம்பல் மேடுகளும் ஆப்பிரிக்கப் பழங்குடிகளும்.**

*தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கடல்சார்வரலாறு மற்றும் தொல்லியல் துறையில் 2022-24ஆம் ஆண்டுகளில் முதுகலை பயின்ற மாணவர்களுடன் பழனிப் பகுதியில் தொல்லியல் களஆய்வில் ஈடுபட்டிருந்தோம். நெய்க்காரப்பட்டியில் சாயுங்காலத்தில் ஒரு வீட்டில் பசு மாட்டின் கால்களில் பூச்சி மருந்துப் பொடியை ஒரு பெரியவர் தடவிக்கொண்டிருந்தார். எனக்கு இது அதிசயமாக இருந்தது. நான் அவரிடம். "ஏன் பூச்சிமருந்தைத் தடவுகிறீர்கள்?" என்று கேட்டபோது அவர், "மாடுகளுக்கு சாயுங்காலத்தில் கொசுக்கடி அதிகமாக இருக்கும். எனவே இதிலிருந்து அவற்றைக் காப்பதற்கு இது அவசியம்" என்று கூறினார். இது எனக்கு ஒரு தொல்லியல் தொடர்பான ஒரு முக்கியமான இனவரைவியல் நடத்தைக்கூறாகப் பயன்பட்டது. பொதுவாக, புதிய கற்கால மக்களை ஆய்வு செய்யும் தொல்லியல் ஆய்வாளர்கள் மேய்ச்சல் சமூகங்களை ஆய்வுக்கு உட்படுத்துவர். மேய்ச்சல் சமூகங்களைப் புரிந்துகொள்ளாமல் புதிய கற்காலத் தொல்லியல் இடங்களைப் புரிந்துகொள்ளமுடியாது. மாடுகள் எவ்வாறு பராமரிக்கப்படுகின்றன? மேய்க்கப்படுகின்றன? அவற்றின் நடத்தைகள் என்ன? என்பன உள்ளிட்ட பல தகவல்கள் தொல்லியல் ஆய்வுக்கு உதவியாக இருக்கும். தென்னிந்தியப் புதிய கற்கால இடங்களில் பெரிய சாம்பல் மேடுகளும், அல்லது சிறிய அளவிலான சாம்பல் படிவுகளும் காணப்படுகின்றன. இவை பொ.ஆ.மு 3300 முதல் பொ.ஆ.மு. 1200 வரையான காலகட்டத்தைச் சேர்ந்தவை (*Paddayya ***1973, 1993***a, ***1993***b, ***1995, 1998, 2019;*** Narasimhaiah ***1980;*** Fuller et al. ***2007;*** Johansen ***2004;*** Morrison et al. ***2015;*** Johansen and Bauer ***2023, 2024;*** Selvakumar et al. ***2021, 2024;*** Paranthaman and Venkataguru Prassana ***2025)****. தென்னிந்தியப் புதிய கற்காலச் சாம்பல் மேடுகள் ஏன் உருவாயின? என்பதற்கு அறிஞர்களால் பல விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாக்கவும், சடங்குகளுக்காகவும் பசுமாட்டுச் சாணம் எரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டும் எனக்கூறப்பட்டுள்ளது.*

## நெய்க்காரப்பட்டியில் கால்நடைகளின் உடல் மீது மருந்து தடவுதல்

நெய்க்காரப்பட்டியில் நாங்கள் கண்ட பெரியவர், "மாடுகளைக் கொசுக்கடியில் இருந்து பாதுகாக்க முன்பு சாம்பல் தடவும் வழக்கம் இருந்தது" என்று கூறினார். எனவே மாடுகளின் நலனுக்காகவும் அவற்றைப் பூச்சிக்கடியிலிருந்து காக்கவும் மாட்டுச் சாணத்தைப் புதிய கற்கால மக்கள் எரித்திருக்கவேண்டும். குறிப்பாக இயற்கையான காட்டில் வாழ்ந்த மாடுகள் சாணத்தை அங்கங்கே விட்டுச்செல்லும். அதனால், அவை கால்நடைகளை அதிகம் பாதிக்காது. ஆனால் மனிதர்கள் அவற்றைப் பழக்கப்படுத்திப் பட்டியில் ஓர் இடத்தில் அடைக்கும்போது ஒரு சிக்கல் ஏற்படுகிறது. அதாவது மாடுகள் அடைக்கப்பட்டு இருக்கும் இடத்தில் உள்ள சாணத்தை அடிக்கடி அள்ளி, சுத்தம் செய்வது அவசியமாகிறது. இல்லையெனில் கொசுத்தொல்லை அதிகரிக்கிறது. எனவே மேற்கண்ட இனவரைவியல் தகவலிலிருந்து, புதியகற்கால மக்கள் பசுமாட்டுச் சாணத்தை சுத்தத்திற்காகவும், கொசுக்கடியிலிருந்து மாடுகளையும் தங்களையும் பாதுகாக்கவும் எரித்தார்கள் எனக் கருதலாம். இவ்வாறாக எரிக்கப்பட்டதன் விளைவாக, பெரிய சாம்பல் மேடாகவும், சாம்பல் படிந்த இடங்களாகவும் தென்னிந்தியப் புதியகற்கால இடங்கள் காணப்படுகின்றன என்ற முடிவுக்கு வரலாம். இதற்கான மேலும் ஒரு முக்கியமான இனவரைவியல் சான்று ஆப்பிரிக்காவில் நமக்குக் கிடைக்கிறது.

## ஆப்பிரிக்கவின் முண்டாரி பழங்குடிகள்

ஆப்பிரிக்காவில் பல மேய்ச்சல் சமூகங்கள் உள்ளன. இவர்களில் முண்டாரி, மாசாய் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். முண்டாரி நைல் பள்ளத்தாக்கில் உள்ள மாடு வளர்க்கும் வேளாண்மை செய்யும் குடிகளாவர். இவர்கள் நீலோட்டிக் குடிகள் எனப்படுகின்றனர். இவர்கள் கிறித்துவ, பழமையான வழிபாடுகளைக் கொண்டவர்கள். தங்களது கால்நடைகளைப் பாதுகாக்க இயந்திரத் துப்பாக்கிகளைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் அங்கோல் வட்டுசி என்ற கால்நடைகளைப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் கால்நடைத் தொழுவங்களில் தினமும் சாணத்தை அள்ளி அதை எரித்து

அச்சாம்பலை மாடுகளின் மீது தேய்த்து கொசுக்களை விரட்டப் பயன்படுத்துகின்றனர். அதைப் பற்பசையாகவும், உடலில் பூசும் பொடியாகப் (பூதரமாவு) பயன்படுத்துகின்றனர் (Feron and Tasnier 2021; Belinda 2024). முண்டாரி பழங்குடிகள் பசுக்களின் சாணத்தை எரித்து அந்தச் சாம்பலைப் பலவிதமாகப் பயன்படுத்துகின்றனர். அவற்றைத் தங்களது உடலிலும் பூசுகின்றனர். அவர்கள் மாடுகளின் மீதும் சாம்பலைப் பூசுகின்றனர். சாணத்தை எரிப்பதன் மூலமாக மாடுகளைக் கடிக்கும் கொசுவையும் விரட்டுகின்றனர். இவ்வாறாக முண்டாரி பழங்குடிகளின் மாட்டுச் சாணத்தை எரிக்கும் முறையும், மாடுகள் தங்கள் உடல்களின் மீது சாம்பலைத் தடவும் முறையும் தென்னிந்தியப் புதியகற்கால மக்கள் ஏன் சாம்பலை எரித்து மேடுகளாக ஆக்கினார்கள் என்பதைப் புரிந்துகொள்ள உதவுகின்றன. மேலும், இவர்கள் மாடுகளின் மூத்திரத்தை கைகள், முகம், உடல், பல் ஆகிய பாகங்களைக் கழுவவும் தலையிலும் தேய்ப்பார்கள். மாட்டு மூத்திரத்தையும், சாம்பலையும் மாடுகளின் கொம்புகளில் தேய்க்கிறார்கள். மாட்டு மூத்திரத்தையும் குடிக்கிறார்கள். மாட்டு மூத்திரத்தை மருந்தாகக் குடிக்கும் வழக்கம் இந்தியாவிலும் உள்ளது. மாட்டுச் சாணத்தை கிருமி நாசினியாக வீட்டில் மெழுகும் வழக்கம் இன்றும் இந்தியாவில் உள்ளது. இது பஞ்சகாவ்யம் எனப்படும் பசுவின் சாணம், சிறுநீர், பால், தயிர், நெய் கொண்டு உருவக்கப்படும் பூசைப் பொருளிலும் பயன்படுத்தப்பட்டது. இது பல கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது. பசு மூத்திரம் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது (Randhawa and Sharma 2015).

## 2. சங்க இலக்கியமும், நடுகற்களும், சமகால, ஆப்பிரிக்க மாடுபிடிச் சண்டைகளும்

பொதுவாக இலக்கிய, வரலாற்றுச் சான்றுகளைப் புரிந்துகொள்ள இனவரைவியல் சான்றுகள் உதவுகின்றன. சங்க இலக்கியத்திலும் தொல்காப்பியத்திலும் மகாபாரதத்திலும் மாடுபிடிச்சண்டைகள் பேசப்படுகின்றன. தமிழ் நாட்டில் உள்ள நூற்றுக்கணக்கான நடுகற்கள் மாடுபிடிச் சண்டை இடைக்காலத்திலும், அரசுருவாக்கத்திற்குப் பின்னும் தொடர்ந்து நடைபெற்றதை உறுதிப்படுத்துகின்றன (பூங்குன்றன் 2023). குறிப்பாகத் திருவண்ணாமலைக்கு அருகில் உள்ள செங்கம் பகுதிகளில் இவை அதிகமாகக் கிடைக்கின்றன (Nagaswamy

*1968;* நாகசாமி *1972;* Rajan *2000;* கார்த்திகேயன் *2017;* பூங்குன்றன் *2023)*

*வீரர்களுக்கு நடுகல் எடுத்த மரபைப்*
*புறநானூற்றின் 260 ஆவது பாடல்,*
*"பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி*
*மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொடு*
*அணிமயிற் பீலிசூட்டிப் பெயர் பொறித்து*
*இனி நட்டனரே கல்லும் கன்றொடு*
*கறவை தந்து பகைவ ரோட்டிய*
*நெடுந்தகை கழிந்தமை அறியாது*
*இன்றும் வருங்கொல் பாணரது கடும்பே."* என்று பேசுகிறது.

இது ஓர் இனவரைவியல் விளக்கம் எனக் கருதலாம். இதைக் கற்பனை அல்லது புனைவு எனக் கருத இயலாது. இவ்வழக்கம் நடுகற்கள், நடுகற்கல்வெட்டுகளால் உறுதிப்படுத்தப்படுகின்றன ஆப்பிரிக்காவில் இன்றும் இச்சண்டைகள் நடைபெறுகின்றன. மழைக்காலத்தில் அதிகமாக இன்றும் கால்நடைச் சண்டைகள் நடைபெற்றுவருகின்றன. இவற்றைச் சட்டம் ஒழுங்குச் சிக்கலாகப் பார்க்கப்படும் நிலையில், சமகால அரசியலும் கலந்து இருப்பதைக் காணலாம். ஆப்பிரிக்காவில் நடக்கும் தற்கால மாடுபிடிச் சண்டைகள், இயந்திரத் துப்பாக்கிகளின் பயன்பாடு காரணமாக மிகவும் அதிக உயிர்ச்சேதம் விளைவிப்பதாகக் கருதப்படுகிறது. சங்க காலச் சமூகத்தைப் புரிந்துகொள்ள இத்தகைய இனவரையில் அணுகுமுறை பயனுள்ளதாக உள்ளது. குறிப்பாக, சங்க காலத்தில் நடைபெற்ற வெட்சி, கரந்தைப் போர்களைப் புரிந்துகொள்ள இவை உதவுகின்றன. கால்நடைகளைத் திருடும் வழக்கம் 20ஆம் நூற்றாண்டிலும் இருந்தது தஞ்சாவூர் பகுதிகளில் மாடு களவு செய்து அதற்கு பணம் கோரும் வழக்கம் இருந்துள்ளது.

## ஆப்பிரிக்க மாடுபிடிச் சண்டைகள்

மிகவும் மோசமான மாடுபிடி சண்டைகள் இன்றும் ஆப்பிரிக்கவிலும் குறிப்பாகச் சூடானில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும் (Mkutu 2005; Witsenburg and Roba *2009;* King *2017;* Wild et al. *2018).* கிழக்கு ஆப்பிரிக்காவில் நூயர், தின்கா

முர்லே ஆகியோர் மாடுபிடிப் போரில் (சண்டையில்) ஈடுவதாகக் கூறப்படுகிறது. வடக்கு கென்யாவில் வறட்சியின் காரணமாக இத்தகைய மாடு திருடுதல் நடைபெறுகிறது எனக் கருதப்படுகிறது. மேலும், மழைக்காலங்களில் இத்தகைய மாடு திருடும் நிகழ்வுகள் அதிகமாக நடைபெறுவதாக அறிஞர்கள் கருதுகின்றனர். மேலும், இதை ஒரு ஒழுக்கற்ற நிலை என்பதைவிட ஒரு சமூக வழக்கமாகப் பார்க்கலாம் என்று அறிஞர்கள் கூறுகின்றனர் (Witsenburg and Roba 2009; King 2017; Wild et al. 2018). "நுயர் மக்கள் மாடுகள் மக்களை அழிப்பதாகக்கூறுகிறார்கள். ஏனெனில் பசுவிற்காக இறந்தவர் பிற காரணங்களுக்காக இறந்தவர்களை விட அதிகம்" என்று இவான்ஸ் பிர்ட்ஸ்சர்டு பதிவு செய்கிறார் (Evans-Pritchard 1940).

மேற்கண்ட மாடுகளைக் களவாடும் வழக்கம் சங்க காலத்திலும், பல்லவர், சோழர் காலத்திலும் இருந்ததை முன்னர் கண்டோம். மாடு திருடுதலை நவீன காலத்தில் களவு என்று கருதினாலும், சங்க காலத்தில் அது ஒரு வீரச்செயலாகப் பார்க்கப்பட்டுள்ளது. சங்கம் மருவியகாலகட்டத்தில்சமண, பௌத்த, பிறசமயக்கருத்தாக்கங்களின் தாக்கத்தினால் நீதி நூல்கள் உருவானமை குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும் போரில் எதிரிகளின் பொருள்களையும், பெண்களையும் வலுக்கட்டாயமாக எடுத்துச்செல்வது இடைக்காலத்திலும் வழக்கமாக இருந்துள்ளது. இத்தகைய ஒரு காலத்தில்தான் நீதி, அறம் ஆகியவற்றை நிலைநாட்டும் நூல்கள் சங்கம் மருவிய காலத்தில் கிடைக்கின்றன. இடைக்காலத்தில் கைப்பிழையாகப் பிறரைக் கொன்றவர்களுக்குக் கோயிலில் விளக்கெரித்தல் தண்டனையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, இடைக்காலத்தைய பார்வைகள் அக்காலத்திற்கே உரியனவாகும்.

### 3. வணிகக் குழுக்களும் சண்டைகளும்

வணிகர்கள் குழுவாகச் செயல்பட்டு வந்துள்ளனர். அவர்கள் தனிப்படையையும் வைத்திருந்துள்ளனர். எறிவீரப்பட்டினம், ஆசிரியப்பட்டினம் போன்ற பாதுகாக்கப்பட்ட மையங்களையும் உருவாக்கியுள்ளனர். தங்களுக்கு இடர் ஏற்படுத்தியவர்களைக் கொன்றுள்ளனர். இதில் திண்டுக்கல் மாவட்டம் சமுத்திராபட்டியில் கிடைக்கும் கல்வெட்டு குறிப்பிடத்தக்கதாகும் (வேதாசலம்,

இராசகோபால், சாந்தலிங்கம், போசு 1992). இதில் வணிகர்களைக் கொன்றவர்களுக்குப் பரிசளித்து எறிவீரதளத்தை உருவாக்கியுள்ளனர்.

எனவே, பூசல், சச்சரவில் சிலர் கொல்லப்படுவதும் வழக்கமாக இருந்துள்ளது. தண்ணீர் பாய்ச்சுதல், களவு போன்ற பல காரணங்களுக்காகச் சண்டைகள் ஏற்பட்டுள்ளன.

## 4. ஊர்ப்பூசல்கள்

பழங்காலத்தில் பல ஊர்களில் பூசல்கள் நடந்துள்ளன. ஊர்ப்பூசல்கள் இன்றும் நடைபெறுகிறது. சில ஊர்களில் பூசலில் தொடர்பு இல்லாதவர்கள், சமாதானம் செய்யும் போதும் கொல்லப்படுவதுண்டு. இதுபோன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் பல பூசல்கள் நடைபெற்ற நிகழ்வுகளும் உண்டு. ஊரில் உள்ள பலர் ஒருவரைக் கொன்ற நிகழ்வுகளும் உண்டு. சமகாலப் போர்களில் கொல்லப்பட்டவர்களுக்கும் வீரமரணச் சின்னங்கள் எடுக்கப்பட்டுவருகின்றன. சில மரபுகள் இன்றும் நம்முடன் தொடர்ந்து வருகின்றன. எனவேதான் இனவரைவியல் தொல்லியல், வரலாற்று ஆய்விற்கு அவசியமாகிறது.

## 5. நல்லூர் குயவர்களும் பானைகளில் அணிவேலைப்பாடும்

கும்பகோணம் அருகே இருக்கும் பாபநாசத்திற்கு அண்மையில் உள்ள நல்லூர் என்ற ஊரில் உள்ள குயவர்களை அபிநயா என்ற மாணவியின் ஆய்வியல் நிறைஞர்ப் படிப்பின் ஆய்வேட்டிற்காகக் கள ஆய்வு செய்த போது அங்குள்ள குயவர்கள், பொங்கல் சமயத்தில் உருவாக்கப்படும் சர்க்கரைப் பொங்கலுக்கான பானைகளில் மாட்டுக்கொம்பலான அச்சு கொண்டு அணிவேலைப்பாடு செய்வதாகக் கூறினர். வெண்பொங்கல் பானைகளில் இத்தகைய அணிவேலைப்பாடு செய்யப்படுவதில்லை. இத்தகைய வேலைப்பாடுகள் பானைகளில் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள இது மிகவும் உதவியாக அமைந்தது. அவர்கள் மாட்டுக்கொம்பாலான ஒரு அச்சுக்கருவியைக் கொண்டு இந்த அணிவேலைப்பாட்டை உருவாக்குகின்றனர்.

### 6. தேனி மாவட்டக் குயவர்களும் கருப்பு நிறப்பானை உருவாக்கமும்

பொதுவாகத் தொல்லியல் ஆய்வாளர்கள் பானை உருவாக்கம் குறித்து பல மனதளவிலான (impressionistic) கருத்துக்களைக் கூறுவது உண்டு. பொதுவாக, சிவப்புப் பானைகள் அதிகமாக ஆக்சிசனேற்றம் செய்து எரிப்பதனாலும், கறுப்புப் பானைகள் புகைமூட்டம் இடுவதாலும் உருவாக்கப்படுவதாகக் கூறப்படுவதுண்டு. தேனிமாவட்டத்தில் பூதிபுரத்திற்கு அருகில் உள்ள குயவர்களிடம் ஆய்வு செய்த போது அவர்கள் முதலில் பானைகளைச் சுட்டுச் சிவப்பாக்கிய பின்னர், மீண்டும் சுட்டுப் பானைகளைக் கருப்பாக்குவதாகக் கூறினர். இது ஒரு முக்கியமான இனவரைவியல் தகவலாகும். இது இரும்புக்காலம் தொட்டு எவ்வாறு கருப்புப் பானைகள் உருவாக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதை விளக்குகிறது. இத்தகைய தகவல் தொல்லியல் ஆய்விற்குச் செய்முறைத் தொல்லியல அணுகுமுறை மிகவும் அவசியம் என்பதை உணர்த்துகின்றது.

### 7. கரந்தைக் குயவர்கள் பானையை மெருகேற்றும் முறை

தஞ்சாவூருக்கு அருகே உள்ள கரந்தைப் பகுதியில் வசிக்கும் குயவர்கள் குறிப்பாக, கருப்பு நிறப்பானையை உருவாக்குகிறார்கள். இவர்களை நாங்கள் ஆய்வு செய்தபோது ஒரு கருப்பு நிற மரக்கொட்டைகளை மாலையாகக் கட்டி அவற்றைப் பானைகளின் மீது தேய்த்து மெருகேற்றுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளமுடிந்தது.

### 8. கேரளக் கொல்லர்களும் இரும்பு உருக்குதலும்

இரும்புத் தொழில் நுட்பம் குறித்து தொல்லியல் ஆய்வாளர்கள் பேசும்போது பல இடங்களில் இரும்புக்கழிவுகள் குறித்துப் பேசுகிறார்கள். ஆனால் இரும்புக்கழிவுகளில் இரும்பு உருக்குக்கழிவும், இரும்பு வேலை செய்யகூடிய கொல்லுத் தொழில் செய்பவர்கள் உருவாக்கும் கழிவும் வேறு என்று கேரளாவில் பட்டனத்திற்கு அருகில் உள்ள பரவூரில் நாங்கள் கண்ட கொல்லர்

கூறினார். அவர், கேரளாவில் ஆனப்பாறா அகழாய்வில் நாங்கள் கண்டுபிடித்த இரும்புக்கழிவைக் கண்டபோது அவர் அதை உருகிய மண் என்று கூறினார். பின்னர் எங்களால் கொல்லுவேலை செய்யும் போது உருவாகிய உருகிய மண் கழிவையும், இரும்பு உருக்கும் போது உருவான உருக்குக் கழிவையும் வேறுபடுத்த முடிந்தது. எனவே, தொல்லியல் ஆய்வாளர்கள், மக்களின் பண்பாட்டுச் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ளும்போது பொருள் பண்பாடுகளின் உற்பத்திச்சூழலை நன்கு விளக்க முடிகிறது.

## 9. பளியர்களும் காட்டில் வாழ்விடங்களை அமைத்தலும்

பொந்துப்புளி என்ற ஊர் பழனிக்கு அருகில் உள்ள பளியர் வாழ்விடமாகும். நாங்கள் 2023 இல் அங்கு கள ஆய்விற்குச் சென்றபோது அங்குச் சந்தித்த பழங்குடியினர் ஒரு வாழ்விடம் உருவாக்கவேண்டுமென்றால் சில மரங்களை முதலில் நடுவோம் என்று கூறினர். இதில் வெளிப்பட்ட முக்கியமான கருத்து என்னவென்றால், வாழ்விடம் என்பது மக்கள் கட்டக்கூடிய வீடுகள் மட்டுமல்ல; அங்கு இருக்கக்கூடிய மரங்கள் செடிகொடிகளும்தான். மக்கள் தங்கள் வாழ்வியலுக்கு ஏற்றவாறு இயற்கைக் காடுகளைக் கொன்று சுத்தம் செய்து அவர்களுக்கு ஏற்ற தாவரங்களை நடுகிறார்கள். தொல்லியல் ஆய்வாளர்கள் பொதுவாக இதைக் கருத்தில் கொள்வதில்லை.

## 10. காவிரிப்படுகையில் நெல் விளைச்சலும் கல்வெட்டுத் தரவுகளும்

தஞ்சாவூர்ப் பகுதிகளில், குறிப்பாகக் காவிரிப் படுகையில் உள்ள நன்செய் விளைநிலங்களின் விளைச்சல் குறித்த தகவல்கள் இனவரைவியல் வழியாகக் கிடைக்கின்றன. கல்வெட்டுகளில் உள்ள தகவலைக் கொண்டு விளைச்சலை முழுமையாக அறிய முடிவதில்லை. இதை நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பிடுகிறார் (சாஸ்திரி 2009). பொதுவாகக் காவிரிப் படுகையில் உள்ள வேளாண் மக்கள் வேலி, மா, குழி போன்ற நில அளவுகளையும், மரக்கால், கலம் போன்ற அளைவைக் கணக்குகளையும் பயன்படுத்துகின்றனர். நன்செய் விளைநிலங்கள் ஒரு மாவிற்கு 25 முதல் 40 கலம் வரை நெல் விளையக்கூடியவை என்று கூறுகின்றனர். இவர்கள் ஒரு

மாவில் விளையும் கல அளவை மேனி என்றும் குறிப்பிடுகின்றனர். இந்த விளைச்சல் அளவு, ஊர், நிலம் அமைந்துள்ள இடம் ஆகியவற்றிற்கேற்ப மாறும்.

தஞ்சாவூர் இராசராசேஸ்வரம் கல்வெட்டுகள் "இறைகட்டின காணிக்கடன்" என்று ஒரு மாவிற்குச் சுமார் 5 கலம் நெல்லைக் கோயிலுக்கு அளிக்கவேண்டும் என்று கூறுகின்றன (SII, 2, கல்வெட்டு எண் 4). பொதுவாக ஒரு மா, நிலம் சுமார் 25 கலம் நெல் விளையும், என்ற நல்ல விளைச்சல் கணக்கில், ஐந்தில் ஒரு பங்காக இக் காணிக்கடனைச் சோழர் காலத்தில் தீர்மானித்திருக்கலாம். பொதுவாக, காவிரிப்படுகைப் பகுதியில் நில உடமையாளர்க்கு ஒரு மாவிற்கு ஐந்து கலம் என்று நெல் அளிக்கப்படும் வழக்கம் நன்னிலம் பகுதியில் இன்றும் உள்ளது. இதை மேல்வாரம் என்பர். இந்த அளவு 20 ஆம் நூற்றாண்டிலிருந்து நிலவுகிறது எனக் கருதலாம். எனவே, ஒரு மா நிலத்தில் 5 கலம் அரசுக்கு இறைகட்டின காணிக்கடனாக அளித்த பின்னர், மீதமுள்ள நெல்லைப் பிறர் பகிர்ந்தார்கள் எனக் கருதலாம். இதிலிருந்து சோழர்காலத்தின் இறைகட்டின காணிக்கடனும், தற்கால காவிரிப்படுகை மேல்வாரமும் ஒரே அளவில் உள்ளதை அறியலாம்.

சோழர்காலத்தில் மேல்வாரம் பல அளவுகளில் இருந்ததாக நீலகண்டசாஸ்திரி குறிப்பிடுகிறார் (சாஸ்திரி 2009: 762). மேல்வாரம் அல்லது குடிவாரம் குறித்து மராட்டியர் கால ஆவணம், 25 வேலிக்கு குத்தகையான 5716 ½ கலம் நெல்லில் சம்பா பசானம் 22 வேலிக்கு குத்தகை நெல் 5110 கலம் எனக் கூறுகிறது (வேங்கடராமையா 1984: 137). இதற்குக் குடிவாரம் 2044 கலம், போக மேல்வாரம் 3066 கலம் எனவும் இது கூறுகிறது. இதில் 22 வேலிக்கு, 5110/22 – 232.27 கலம். எனவே 232.27/20 – 11.6135 கலம். எனவே இது ஒரு மாவிற்கு 11.61 கலம் என்ற அளவில் வருகிறது. இதன் வழியாக நாயக்கர் காலத்தில் உழுது பயிரிடுவருக்கு விளைச்சலில் 2 மடங்கும், நில உடமையாளருக்கு 3 மடங்கும் அளித்ததை அறிகிறோம். இது அரசின் வரிகளைக் கழித்த பின்னர்வரும் நெல்லாக இருக்கவேண்டும். இராஜாதிராஜன்காலத்தில் மைசூர் பகுதியில் நன்செய் நிலங்களுக்கு 5 இல் 2 பகுதியாகவும், புன்செய் நிலங்களுக்கு கால்பகுதியாகவும் மேல்வாரம் இருந்ததை அறிகிறோம். (சாஸ்திரி 2009: 763). எனவே, சோழர் காலத்திலும் இதே போன்ற மேல்வாரம்–கீழ்வாரம் (குடிவாரம்) இருந்திருக்க வாய்ப்பு

உண்டு. இதைக் குறித்து கூடுதல் ஆய்வு செய்யவேண்டியுள்ளது. இதில் குத்தகைத் தொகை என்று கூறப்பட்டிருப்பதால், ஒரு மாவின் முழு விளைச்சல் அளவில் பாதியாக குத்தகைத் தொகை மதிப்பிடப்பட்டிருக்கலாம். மேல்வாரம் என்ற சொல்லாட்சி இன்றும் தஞ்சாவூர் பகுதியில் வழக்கில் உள்ளது. கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் பஞ்சவாரம் என்பதும் இது போன்ற ஒரு முறையாக இருக்கவேண்டும். விளச்சலில் ஐந்தில் ஒன்றை அளிப்பதால் அது பஞ் சவாரம் என்ற பெயரைப் பெற்றிருக்கவேண்டும். திருவிடைமருதூர் கல்வெட்டில் தேவதானம் குடிநீக்கிய நிலையில், பஞ்சவாரமாக அளிக்கவேண்டிய 256 கலத்தை திரைமூர் சபையார் அளிக்காமல், குடிநீங்கா தேவதான வகையில் 160 கலம் மட்டுமே அளந்துவந்தனர் என்ற செய்தி உள்ளது (SII 3, 203). அதில் 256 கலம் பஞ்சவாரம் அளிக்கவேண்டியதை அவர் அளிக்கவில்லை என்று அறிகிறோம். இதிலிருந்து குடிநீங்கா அளித்த தேவதானத்திற்கு 160 கலமும், குடிநீக்கி அளித்த தேவதான நிலத்திற்கு 256 கலம் பஞ்சவாரமாக அளிக்க வேண்டும் எனவும் அறியமுடிகிறது. இவை 10:16 (5:8) என்ற அளவில் இருந்துள்ளதை இக்கல்வெட்டு தெளிவுபடுத்துகிறது. திருவண்ணாமலைக் கல்வெட்டு நான்கு பட்டி அளவு நிலத்திலிருந்து 160கலம் முக்குறுணி அறு நாழி மேல்வாரமாக அளிக்கவேண்டும் என்று கூறுகிறது (SII 8, 66). இதிலிருந்து சில இனவரைவியல் சான்றுகளைக் கொண்டு எல்லாச் சூழல்களிலும் நேரிடையான விளக்கங்களை அளிக்கமுடியாது என்பது தெளிவாகின்றது. ஆனால், அவற்றை ஓரளவு ஒப்புமைக்கும் புரிந்துகொள்வதற்கும் பிறசான்றுகளின் உதவியுடன் பயன்படுத்திக்கொள்ளலாம். இருப்பினும் அவை தொல்லியல், வரலாற்று ஆய்விற்கு மிக அவசியம் என்பதை அறியலாம்.

## நிறைவுரை

வரலாற்று ஆய்விற்கும் தொல்லியல் ஆய்விற்கும் காட்சிப்படுதலுக்கும் இனவரைவியல் பெரிதும் உதவுகின்றது. கள ஆய்வின்போது உள்ளூர் மக்களிடையே கள ஆய்வு செய்வது பண்பாட்டு, சுற்றுக்சூழல் தகவல்களை அறிய உதவுகின்றது. இக்காட்சிப்படுத்தல் எழுத்தாளர், திரைப்பட இயக்குநர் அவர்களுக்கு உள்ளது போல, தொல்லியல், வரலாற்று ஆய்வாளர்களுக்கும் துறை நெறிமுறைகளுக்குட்பட்டு அவசியமானதாகும்.

தொல்லியலில் பயன்படுத்தப்படும் ஒப்புமை அணுகுமுறையை மிகவும் எச்சரிக்கையாகப் பயன்படுத்தவேண்டும். முண்டாரி பழங்குடிகளைப்போல தென்னிந்தியப் புதியகற்கால மக்கள் இருந்தார்கள் என நேரிடையாக ஒப்புமை அணுகுமுறையைப் (analogical argument) பயன்படுத்திக் கூற இயலாது (McGranaghan 2017). சங்க கால ஆநிரைகவர்தல் இன்றைய ஆப்பிரிக்க மாட்டுச் சண்டைபோல இருந்தது எனவும் கூற இயலாது. ஆனால், இவற்றை தொல்லியல் ஆய்வாளர் அறிவது மிகவும் அவசியமாகும். இப்பண்பாட்டு மரபுகளைப் புரிந்துகொள்ளவும், அவற்றிற்கிடையே காணப்படும் சில ஒற்றுமைகளையும் அறியவும் ஒப்புமை இனவரைவியல் ஆய்வுகள் உதவுகின்றன. சில நிலைகளில் பின்போர்டு அவர்கள் கூறுவது போல இடைநிலைக் கோட்பாடுகளை உருவாக்க இனத் தொல்லியல் ஆய்வுகள் உதவுகின்றன. புதிய தொல்லியலாளரான லூயி பின்போர்டு உருவாக்கிய இடைநிலைக் கோட்பாடு (middle range theory) நாம் பார்க்கூடிய தொல்லியல் சான்றுகளுக்கும் பார்க்க இயலாத பண்பாட்டு நடத்தைக் கூறுகளுக்கும் இடையே ஒரு அறிவியல்பூர்வமான தொடர்பை உருவக்க முனைகிறது. இது இனத் தொல்லியல் செய்முறைத் தொல்லியலைப் பயன்படுத்திக் கடந்த காலப் பண்பாட்டு இயக்கங்களுக்கும் (cultural dynamics), அது உருவாக்கும் நிலையான தொல்பொருள் சாண்றுகளுக்கும், பண்பாட்டுக் கோலங்களுக்கும் (archaeological statics and cultural patterns) உள்ள உறவுகளை ஆராய்கிறது. சோதனை செய்யக்கூடிய கருதுகோள் வழி,கடந்தகாலச் செயல்பாடுகளை விளக்க இம்முறை உதவுகிறது (Binford 1978, 1983).

தொல்லியல், வரலாற்று ஆய்வுகளை முறையாக நடத்த இனவரைவியல் பார்வைகள், தரவுகள் மிகவும் அவசியமாகும். இனவரைவியல் மாதிரிகளை எல்லா நிலைகளிலும் அப்படியே ஒப்புமையாக எடுத்துக்கொள்ள இயலாது. செய்முறைத் தொல்லியலும், இனவரைவியல் முறைகளுடன் இணைவது தொல்லியல் ஆய்விற்கு மிகவும் அவசியமாகும். இவ்வாறாக இனவரைவியல் ஆய்வு ஒரு பட்டறிவுக் கருவியாக, (heuristic device) உரைகல்லாகத் தொல்லியல், வரலாற்று ஆய்வுகளுக்குப் பயன்படுவதை நாம் புரிந்துகொண்டால், துறையிடை ஆய்வின் அவசியத்தையும், இனவரைவியலின் சிறப்பையும் நாம் உணரலாம்.

## சான்றுகள்

### தமிழ் நூல்கள்


- *ஆ. கார்த்திகேயன் 2017. ஆநிரை பூசல். உங்கள் நூலகம்.* https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-jun17/33320-2017-06-22-03-52-56.
- *இரா. நாகசாமி. 1972. செங்கம் நடுகற்கள். சென்னை: தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை.*
- *கே.ஏ. நீலகண்டசாஸ்திரி 1989. சோழர்கள். தொகுதி. இந்திய வரலாற்றாய்வுக்கழகம்.*
- *பக்தவச்சல பாரதி. 2011.பண்பாட்டு மானிடவியல் மிகச் சுருக்கமான அறிமுகம். அடையாளம் பதிப்பகம்.*
- *ர. பூங்குன்றன் 2023. பண்டைய தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களும் நடுகற்களும் (சமூகம், அரசியல், மொழி), செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை*
- *சி. மகேசுவரன் 2023. பண்பாட்டு ஆய்வியல். பாரதி புத்தகாலயம்*
- *கே.எம். வேங்கடராமையா 1984. தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும். தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
- *வெ. வேதாசலம், சு. இராசகோபால், சொ. சாந்தலிங்கம், செ. போசு 1992. பாண்டி நாட்டில் சில புதிய கல்வெட்டுக்கள். ஆவணம் 21, எண். 2.*

## ஆங்கில நூல்கள்


- Adams, Kathleen M. 2012. Ethnographic Methods. Handbook of Research Methods in Tourism: Qualitative and Quantitative Methods, eds. Larry Dwyer, Alison Gill and Neelu Seertaram. Northampton, MA & Edward Elgar/Ashgate. pp. 339-351.
- Auyero, Javier 2006. Introductory note on politics under the microscope. Special issue on political ethnography. International Qualitative Sociology 29: 257-259.
- Baral, Sushil, Sudeep Uprety and Bipul Lamichhane 2016. Ethnography. Herd Publication Visit Us: www.herd.org.np Follow Us: @HERDNepal. https://www.herd.org.np/uploads/frontend/Publications/PublicationsAttachments1/1480653184-Ethnography_1.pdf.
- Belinda, J. 2024. Bathing and Drinking Cow Urine in East Africa: The culture that bathes and drinks Cow Urine. Medium.com. https://medium.com/the-story-in-history/bathing-and-drinking-cow-urine-in-east-africa-5a0a58434d3d
- Binford, L.R. 1978. Caribou Hunters: Nunamiut Ethnoarchaeology. Academic Press, New York.
- Binford, L.R. 1983. In Pursuit of the Past: Decoding the Archaeological Record. University of California Press.
- Burnett, Charles 2024. Al-Birūnī: An outstanding polymath of eleventh century Islam. Journal of Physics: Conference Series. 2877 012020
- Eriksson, P. and A. Kovalainen. 2015. Ethnographic Research, Qualitative Methods In Business Research, 149-163. Eriksson.%20 and%20Kovalainen.pdf
- Evans-Pritchard, E.E. 1940. The Nuer: A Description of the Modes of Livelihood and Political Institutions of a Nilotic People. Oxford, Clarendon Press.
- Feron, Benoît and Tasnier, Anne-Françoise 2021. Cattle Culture Of South Sudan. Wednesday, 28 April 2021.https://africageographic.com/stories/the-mundari-of-south-sudan/
- Fuller, D., N. Boivin, and R. Korisettar. 2007. Dating the Neolithic of South India: New radiometric evidence for key economic, social and

ritual transformations. Antiquity, 81 (313), pp. 755-778. Doi: 10.1017/S0003598X00095715

- Gobo, Giampietro 2008. Doing Ethnography. London: Sage.
- Hamilakis, Yannis and Aris Anagnostopoulos 2009. What is Archaeological Ethnography? Public Archaeology: Archaeological Ethnographies 8 (2–3): 65–87
- Hodder, I. 1986. Reading the Past: Current Approaches to Interpretation in Archaeology. Cambridge University Press.
- Hodder, I. 2009. Symbols in Action. University of Cambridge.
- Johansen, Peter and Andrew M. Bauer 2024. Reconceptualizing the Archaeology of Southern India: Beyond Periodization and Toward a Politics of Practice. Routledge.
- Johansen, Peter G. 2004. Landscape, Monumental Architecture and ritual: a Reconsideration of the South Indian Ashmounds. Journal of the anthropological Archaeology 23, pp. 309- 330.
- Johansen, Peter G., and Andrew M. Bauer 2023. Social Distinctions during the South Indian Neolithic: Changing Mortuary Practices in a Late Prehistoric Cemetery at Maski. Antiquity 97(394): 887–907. doi:10.15184/aqy.2023.81.
- King, Rachel 2017. Cattle, raiding and disorder in Southern African history. Africa 87(03):607-630. DOI:10.1017/S0001972017000146
- Mathur, Nita 2022. Ethnographic Research Methods School of Social Sciences. IGNOU, New Delhi, Ignou. http://egyankosh.ac.in//handle/123456789/88612.
- McGranaghan, M. 2017. Ethnographic Analogy in Archaeology: Methodological Insights from Southern Africa. Oxford Research Encyclopedia of African History. Retrieved 24 Nov. 2025, from https://oxfordre.com/africanhistory/view/10.1093/acrefore/9780190277734.001.0001/acrefore-9780190277734-e-213.
- Morris, Margot 2022. Current Research in Ethnoarchaeology. New York, Murphy and Moore Publishing
- Morrison, K. D., S. N. Reddy, A. Kashyap. 2015. Agrarian Transitions in Iron Age Southern India: Social and Environmental Implications, in Vincent Lefèvre, Aurore Didier, A. and Benjamin Mutin eds., South Asian Archaeology And Art 2012, pp. 185-196. Turnhout, Belgium: Brepols Publishers n.v.

- Mkutu, Kennedy Agade 2005. Pastoralist Conflict, Governance And Small Arms In North Rift, North East Africa. Thesis. Political science. University of Bradford, 2005. English.
- Nagaswamy, R. 1968. Seminar on Inscriptions. Madras, Tamil Nadu State Archaeology Department.
- Narasimhaiah, B. 1980. Neolithic and Megalithic Cultures in Tamil Nadu. New Delhi: Sundeep Prakashan.
- O'Reilly, Karen. 2019. "Ethnographic Methods [second Edition]". https://hdl.handle.net/2134/15689
- Paddayya, K. 1973. Investigations into the Neolithic Culture of the Shorapur Doab, South India. Leiden: E.J.Brill.
- Paddayya, K. 1993a. The Ashmounds of South India: Fresh Evidence and Possible Implications. Bulletin of Deccan College Post-Graduate and Research Institute 51-52(1991-1992): 573-626.
- Paddayya, K. 1993b. Ashmound Excavations at Budihal, Gulbarga District, Karnataka. Man and Environment 18(1): 57-87.
- Paddayya, K. 1995. Further Field Investigations at Budihal, Gulbarga District, Karnataka, Bulletin of the Deccan College Research Institute 53(1993): 277-322.
- Paddayya, K. 1998. Evidence of Neolithic Cattle Penning at Budihal, Gulbarga District, Karnataka, South Asian Studies 14: 141-153.
- Paddayya, K. 2019. Neolithic Ashmounds of the Deccan: Their Place in the Archaeology of Peninsular India. New Delhi: Aryan Books International.
- Paranthaman, S. and Venkataguru Prassana 2025. Excavations at Chennanur. In Archaeological Excavations in Tamil Nadu: A preliminary Report, K. Rajan, R. Sivanandam and V.P. Yatheeskumar eds., pp. 1-45. Chennai, : Tamil Nadu State Archaeology Department.
- Rajan, K. 2000. South Indian Memorial Stones. Thanjavur: Manoo Pathippakam.
- Randhawa, G.K. and Sharma, R. 2015. Chemotherapeutic potential of cow urine: A review. Journal Intercultural Ethnopharmacology 2015 Apr-Jun;4(2):180-6. doi: 10.5455/jice.2015022210032. Epub 2015 Mar 7. PMID: 26401404; PMCID: PMC4566776.
- Rhodes, R.A.W. and Corbett, Jack 2020. Ethnographic Approaches, In Rudy B. Andeweg, R.B., Elgie, R., Helms, L., Kaarbo, J., and

Müller-Rommel, F., eds. The Oxford Handbook of Political Executives. Oxford: Oxford University Press. https://eprints.soton.ac.uk/429156/1/Corbett_Rhodes_Final.pdf

- Sangasubana, N. 2009. How to conduct ethnographic research. The Qualitative Report 16(2), 567-573. Retrieved from http://nova.edu/ssss/QR/QR16-2/sangasubana.pdf
- Selvakumar, V. 2021. Current Status of the Southern Neolithic Culture and the Iron Age-Early Historic Transition in South India and Sri Lanka. Journal of the Royal Asiatic Society of Sri Lanka 66, no. 2 (2021): 1–26. https://www.jstor.org/stable/48828121.
- Selvakumar, V., S. Gowrishankar and R. Karthikeyan 2019. Selvakumar, V.Molapalayam: A Neolithic Site Near Coimbatore in Western Tamil Nadu. Heritage: Journal of Multidisciplinary Studies in Archaeology 7: 70-94.
- Selvakumar, V., Veena Mushtrif-Tripathy, G.S. Abhayan, Sathish Naik, Ravi Kant Prasad, V.N. Prabhakar and Sharmila Bhattacharya, 2024. Status of the Neolithic Culture in Tamil Nadu: Excavations at Molapalayam (2020-21), Coimbatore District, Tamil Nadu, in Early Tamil Culture and Heritage, Proceedings of the 1st International Seminar in Commemoration of Padmashree Iravatham Mahadevan, K. Rajan and R. Sivanandam Eds., Chennai: Tamil Nadu State Archaeology Department pp. 93-109.
- SII =South Indian Inscriptions. Delhi, Archaeological Survey of India.
- Whitehead, Tony 2005. Basic Classical Ethnographic Research Methods: Secondary Data Analysis, Fieldwork, Observation/ Participant Observation. Ethnographically Informed Community and Cultural Assessment Research Systems (Eiccars) Working Paper Series.
- Wild, H., Jok, J.M. and Patel, R. 2018 The militarization of cattle raiding in South Sudan: how a traditional practice became a tool for political violence. International Journal Humanitarian Action 3, 2. https://doi.org/10.1186/s41018-018-0030-y
- Witsenburg, Karen M. and Roba, Adano Wario 2009. Of Rain and Raids: Violent Livestock Raiding in Northern Kenya. Civil Wars 11(4). DOI:10.1080/13698240903403915.